திருவுந்தியார்

மூலமும் உரையும்

விசு அய்யர்

நூல் அறிமுகம்

நூலின் பெயர்	:	**திருஉந்தியார்-மூலமும் உரையும்.**
நூல் ஆசிரியர்	:	விசு அய்யர்
எழுத்து	:	11 புள்ளி
முதற் பதிப்பு	:	2025
உரிமை	:	ஆசிரியருக்கு
கணினி அச்சு உதவி	:	மணி பதிப்பகம்
பக்கம்	:	36
மதிப்பு	:	இந்திய ரூபாயில் ரூ.49

என்னுரை

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. *திருக்குறள்:849*

செருக்குடன் கூடிய அறியாமையின் காரணமாக, தன்னை அறிவாளியாக நினைத்துக் கொண்டு, தான் கண்டபடியே பிறருக்குக் காட்டுபவன், தானும் உண்மை காணாதவன் என்பதே உண்மை. .

இந்த அறியாமை தான் ஆணவம். இதுவே நம் உயிர் அறிவை மறைத்து சிவத்தை நம்மிடம் இருந்து விலக்கும். அதனால் இந்த அறியாமையை விட்டு ஒழிக்க வேண்டும். அதற்கு உயிருக்கு அறிவிக்கும் அறிவுடைய பொருளான பேரறிவுடன் தொடர்பு வைத்து இருக்க வேண்டும்.

அதுவரை தெரியாதனவற்றை நமக்கு தெரியாது என்று உணர்ந்து கொண்டு, அதை தெரிந்து கொள்ள முயல்வதும், ஐயம் திரிபு அற கற்ற நன்கு தெரிந்தவற்றை எடுத்து சொல்வதுமே முதிர்ச்சி நிலையின் முதற்படி.

அறியாமை இருளில் இருந்து, அறிவு ஒளி பெற்று விளங்குவதே வளர்ச்சி. இந்த வளர்ச்சியை அடைவதற்கு, உயிர்கள் முயற்சி செய்ய வேண்டும் அதற்கு "நான்", "எனது" என்ற செருக்கை நீக்கி சாத்துவிக குணத்தில் அன்புடன் பழக வேண்டும்.

இந்த படி நிலையில், சைவ சித்தாந்த சாத்திரங்கள் என சொல்லப்படும் மெய் கண்ட சாத்திரத்தில் இருந்து பழமையான நூலான உய்ய வந்த தேவ நாயனார் அருளிச் செய்த திரு உந்தியார் என்ற நூலின் எளிய உரையை அடியேன் தொகுத்து தர செய்ய முயற்சி செய்துள்ளேன்.

பல பெரிய பெரிய உரை நூல்கள் இருந்தும், உதாரணங்களையும் உவமைகளையும் விளக்கங்களையும் எடுட்த்துச் சொல்லாமல் பாடலின் பொருளை புரியும்படி to the point என சொல்வார்களே அது போல சொல்லி உள்ளது. படிக்க நேரமில்லை. நிற்க எனக்கு நேரமில்லை நெடுந்தூரம் செல்ல வேண்டும் என ஓடிக் கொண்டு இருப்பவர்களுக்கும், நீண்ட பெரிய lectureகளை கேட்க விரும்பாத இன்றைய இளைய தலைமுறைகள், reels அளவு செய்திகளை எடுத்துக் கொள்ளும் மன நிலைக்கு வந்து விட்ட படியால், இந்த எளிய உரையை பதிப்பு செய்து இருக்கிறோம்.

இது சரியா தவறா என்ற வாதத்தை விட பழமையை தொழில் நுட்ப புதுமைக்கு எடுத்துச் சென்றால் தான் பலருக்கும் இது போய் சேரும். அழிந்து விடாமல் பாதுகாக்கப் படும் என்ற கருத்தில் இதை படைத்து உள்ளோம். இதையே அருளாலயம் digital classroomல் பதிவு செய்து இருக்கிறோம். இது ஒரு legacy mission என்பதால், 14 சாத்திர நூல்களை தொகுத்து digitalised செய்து வரும் அரும் பெரும் பணியில் இருக்கிறோம்.

எனது ஞான ஆசிரியர், திருவாவடுதுறை ஆதினத்தின் நேர்முக பயிற்சி மையத்தின் இயக்குனர், “மெய்ஞான வள்ளல்”, “செந்நெறிச் செல்வர்” சிவதிரு கு. **வைத்தியநாத ஈசான தேசிகர்,** அவர்களிடம் 25 ஆண்டுகள் பாடங்களை கேட்டு உள்வாங்கியதை இன்றைய இளைய தலைமுறையினரும், முந்தைய இளைய தலைமுறையினரும் எளிதும் படிக்கும் வகையில் சுருக்கமாக bite-sized பாடமாக படைத்து தரப்பட்டுள்ளது. ஆன்றோர் பெருமக்கள் பிழைகளை பொறுத்து அன்புடன் சுட்டி காட்டினால் திருத்திக் கொள்ள தயாராக உள்ளோம்.

இந்த நூலினை வழக்கம் போல கணினி அச்சு செய்து புத்தகமாக உருவாக்கி கொடுத்த **மணிபதிப்பகத்தாருக்**கு நன்றியை பதிவு செய்கிறேன்.

நமது நூல் படைப்பின் வரிசையில் இன்னொரு ,மைல் கல் என்ற ஆவலில் இந்த புத்தகத்தினை வழக்கம் போல வாங்கி படித்து பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டுகிறோம்.

இந்த நூல் அமேசான், விக்கி மீடியா மற்றும் archieve மின் நூலகம் போன்ற தளங்களில் கிடைக்கும். அருளாலயம் podcastல் ஆடியோவாகவும் கேட்டு பயன்பெறலாம்.

பேரன்புடன்

விசு அய்யர்

iyervisuiyer@gmail.com

பதிப்புரை

சைவ சித்தாந்த சாத்திரங்களை, சுலபமாக சொல்ல முடியுமா என்று கேட்பவர்கள், சாத்திர நூல்களையும் தோத்திர நூல்களையும் புரட்டிப் பார்த்தால் தெரியும். அந்த நூல் அமைப்பில் “உந்தீபற” என்ற விளையாட்டு, “பொற்சுண்ணம் இடித்தல்”, “சாழல்” என்ற சொல்விளையாட்டு, “அம்மானை” விளையாடுதல் போன்ற பாடல் அமைப்புகளில் இருந்து விளையாட்டாகவே பல அரிய நுண் பொருள் கொண்ட செய்திகளை சொல்லி இருப்பார்கள்.

அந்த வகையில் நவீன கால digital உலகிற்கு ஏற்ப திரு உந்தியார் என்ற நூலுக்கு எளிய நடையில் பெரிய பெரிய விளக்கங்கள் உவமைகள் என சொல்லாமல் பாடலுக்கான பொருளை தந்து இருப்பது வித்தியாசமாக இருக்கிறது சிறப்பாக இருக்கிறது.

நூல் ஆசிரியர் எதையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறமை படைத்தவர். அவர் தம் படைப்பு திறனை ஒவ்வொரு பதிப்பிலும் பதிப்பாசிரியராக நாங்கள், பார்த்து வியந்து இருக்கிறோம். அந்த வரிசையில், இது மேலும் ஒன்று.

இந்த பெருமகனாரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் நூலக பதிப்பித்து படைத்து தருவதில் பேரின்பம் அடைகிறோம். தொடர்ந்து வரும் அவரது நூல்களையும் தொய்வில்லாமல் தரும் சிந்தனைகளையும் அன்பர்கள் படித்து பயன் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இந்த நூல்களை படித்து பயன் பெறுவது ஒன்றே நூல் ஆசிரியருக்கு நாம் தரும் ஊக்க மருந்து.

எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் அறிவை பகிரும் இந்த நூல் ஆசிரியர் தம் எண்ணங்களுக்கு பலம் சேர்ப்போம் பயன் பெறுவோம்.

- பதிப்பாளர்

திருஉந்தியார்

அகலமாய் யாரும் அறிவு அரிது அப்பொருள்
சகலாமாய் வந்து என்று உந்தீபற
தானாக வந்தது என்று உந்தீபற

யாரும் அறியமுடியாத உருவமற்ற பொருள் கடவுள். ஆனால், நினைத்தவர், அன்பால் நினைத்த உருவம் தாங்கி, நினைத்தவர் முன், வந்து தோன்றும்

பழக்கம் தவிர பழகுவது அன்றி
உழப்புவது என்பெணே உந்தீபற
ஒரு பொருளாலே என்று உந்தீபற

உலக செய்திகளில் உழல்வதால் பயன் ஒன்றும் இல்லை. அந்த பழக்கத்தை மாற்றி திருவருள் நோக்கி அமைய வேண்டும்.

கண்ட அத்தை கொண்டு கருமம் முடித்தவர் உந்தீபற
பிண்டத்தில் வாரார் என்று உந்தீபற
பிறப்பு இறப்பு இல்லை என்று உந்தீபற

யாருக்கு பிறப்பு இறப்பு இல்லை? மனதில் கருதிய கடவுள் உணர்வை கொண்டு தவத்தை செய்பவர்களுக்கு, யாருக்கு பிறப்பு இறப்பு இல்லை.

எங்கன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன் ?
அங்கன் இருந்தது என்று உந்தீபற
அறியும் அறிவு அது அன்று என்று உந்தீபற

கடவுள் அனுபவம் அறிவால் அறிவது அன்று. அது அவரவர் உணர்வை பொறுத்தது.

ஏகனும் ஆகி அனேகனும் ஆனவன்
நாதனும் ஆனான் என்று உந்தீபற
நம்மையே ஆண்டான் என்று உந்தீபற

ஆற்றலால், செயலால், அனுபவத்தால் ஒன்று பலவாக தோன்றுவது போல, கடவுள் ஒருவனே பலவிதமாக உள்ளான்

நம் செயல் அற்று இந்த நாம் அற்ற பின் நாதன்
தன் செயல் தானே என்று உந்தீபற
தன்னையே தந்தான் என்று உந்தீபற

கடவுள் நமக்காக தன்னையே தந்தான் என்று எப்போது புரியும் என்றால், தன்னால் இந்த செயல் முடிந்தது என்ற எண்ணம் இல்லாமல் எல்லாம் இறைவன் செயல் என்ற உணர்வு வரும் போது தான்.

உள்ளம் உருகி, உடன் ஆவார். அல்லது
தெள்ள அரியர் என்று உந்தீபற
சிறப்பரச் செல்வர் என்று உந்தீபற

சித்தத்திலும், அதைவிட நுணுக்கமான இடத்திலும் இருப்பவர் கடவுள் என்ற உணர்வு, கடவுளை நினைத்து உருகினால், மட்டுமே நம்மோடு கடவுள் இருப்பதை உணர முடியும்.

ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல்க உந்தீபற
விமலறக்கு இடம் அது என்று உந்தீபற

குற்றமற்ற கடவுளுக்கு இடம் எது எனில், ஆறு ஆதார சக்கரங்களில் இறைவனை தியானித்து, உச்சியில் நிறுத்த செய்யும் இடமே ஆகும்.

ஆக்கில் அங்கே உண்டாய் அல்லது அங்கு இல்லையாயப்
பார்க்கில் பரம் அது அன்று உந்தீபற
பாவனைக்கு எய்தாது என்று உந்தீபற

பாவனைக்கு கடவுள் எட்ட மாட்டார். உண்டு என்றால் உண்டு இல்லை என்றால் இல்லை

அஞ்சே அஞ்சு ஆக அறிவே அறிவு ஆகத்
துஞ்சாது இருந்து உணர்ந்து உந்தீபற
துய்ய பொருள் ஈது என்று உந்தீபற

அறிவுக்கு ஆதாரமாக ஒரு நுண்ணறிவு தொழில்படும் அதை உணரும் போது உணரப்படும் பொருளாக கடவுள் இருப்பார்.

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கில் குழையும் என்று உந்தீபற
நோக்காமல் நோக்க என்று உந்தீபற

தொடர்பு கொண்டு இருந்தாலும் தொடர்பு இல்லாமல் இருந்தாலும் கடவுள் எனும் நுண் பொருள் இருக்கும். அதை உணர்ந்து கொள்வதே கடவுள் தன்மையது ஆகும்.

மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியார் என்று உந்தீபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற

தொடர்பு கொண்டு இருந்தாலும் தொடர்பு இல்லாமல் இருந்தாலும் கடவுள் எனும் நுண் பொருள் இருக்கும். அதை உணர்ந்து கொள்வதே கடவுள் தன்மையது ஆகும்.

ஓட்டு அற்று நின்ற உணர்வு பதிமட்டித்
தேட்டு அற்ற டாம் சிவம் உந்தீபற
தேடும் இடம் அது அன்று உந்தீபற

தேடினால் இறைவன் கிடைக்க மாட்டான். பற்று நீங்கி நிற்கும் உணர்வில் பதியாகிய இறைவனை சிந்தித்து இருப்பதே அவனிருக்கும் இடம்.
"நினைப்பவர் மானத்துள்ளான்" என்பது அப்பர் வாக்கு

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை உடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டது என்று உந்தீபற

ஆணவ மலப்பற்று கொண்டு இருப்பதால் திருவருள் வெளிப்படாமல் இருக்கிறது. ஞான ஆசிரியர் உயிரின் அறியாமையை போக்கியதும், திருவருளை காணும் ஆர்வம் ஏற்படுகிறது. தற்போதம் அடங்கிய நிலையில் சிவம் வெளிப்பட்டு தம் பால் ஈர்த்துக் கொள்கிறது.

பற்றை அறுப்பது ஓர் பற்றினைப் பற்றில், அப்
பற்றை அறுப்பர் என்று உந்தீபற
பாவிக்க வாரார் என்று உந்தீபற

எதையாவது பற்றி நிற்கும் உயிர், எனது என்ற புறப்பற்றினை அறுக்க திருவருள் பற்றினை பற்றிக் கொள்வது ஒன்றே வழியாகும்.

உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பர் என்று உந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற

உலக பொருள்களில் பற்று வைக்காமல் எதனையும் திருவருள் கண் கொண்டே உணரப் பெற்று இருப்பார்கள் சீவன் முத்தர்கள். திருவருள் துணையின்றி, கருவி கரணங்களால் இறைவனை அடைய முடியாது

திருச்சிலம்பு ஓசை ஒலிவழியே சென்று
நிறுத்தனைக் கும்பிடு என்று உந்தீபற
நேர்பட அங்கே நின்று உந்தீபற

அல்லும் பகலும் அயராது புரியும் திருநடனத்தின் சிலம்பு ஓசை திருவடியை பற்றி நிற்பவர்களுக்கு அகச்செவியில் கேட்கும். புலன் வழியே சிந்தனையை செலுத்தாமல் சிவத்தோடு ஒன்றி இருந்து வழிபடுமின்.

மருளும் தெருளும் மறக்கும் அவன் கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவே இங்கு உள்ளது என்று உந்தீபற

மயக்கம், நினைவு பெற்று தெளிவது என கருதுவதே திருவருளை மறந்து செயல்படுவனவே ஆகும். திருவருளை எப்போதும் மறவாது பற்றி இருக்க வேண்டும் அதுவே நமக்கு துணை.

கருதுவதன்முன் கருத்து அழியப் பாயும்
ஒருமகள் கேள்வன் என்று உந்தீபற
உண்ண அரியன் என்று உந்தீபற

வேறு எதையும் எண்ணாமல் திருவருளின் வழியிலேயே நிற்க பழக விட்டால், தன் முனைப்பு நம்மை விட்டு படிப்படியாக நீங்கும். இறை உணர்வு நமக்குள் பாயும்.

இரவு பகல் இல்லா இன்ப வெளி ஊடே
விரவி விரவி நின்று உந்தீபற
விரைய விரைய நின்று உந்தீபற

இரவு என்பது கேவல நிலை (பிறவிக்கு முந்திய நிலை). பகல் என்பது சகல நிலை (கருவி கரணங்களுடன் கூடிய ஏகதேச அறிவு விளங்கும் நிலை) . இவ்விரு நிலையிலும் திருவருளை பிரியாமல் உயிர்கள் நிற்க வேண்டும்.

சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும் அங்கு
அல்லனாய் ஆனான் என்று உந்தீபற
அம்பிகை பாகன் என்று உந்தீபற

மாதொருபாகன், சுட்டறிவுக்கு எட்டிய பொருள்களோ கற்பனைக்கு அடங்காத பொருள்களோ அதற்கும் அப்பாலும் இறைவன் இருக்கிறான்

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவது ஆற்றல் என்று உந்தீபற
அல்லாதது அல்லது என்று உந்தீபற

அட்டாங்க யோகத்தில் ஒன்று பிராணாயாமம் எனும் மூச்சுப் பயிற்சி. அப்பயிற்சியின் போது, கருத்தை இறைவன் திருவடியில் செலுத்துவது பேராற்றலாகும்.

கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடில்
வெல்ல வெளியாம் என்று உந்தீபற
வீடும் எளிதாம் என்று உந்தீபற

ஆன்மா வசம் பொறிபுலன்கள் இருக்க வேண்டும். ஆனால் பொறி புலன்கள் வசம் ஆன்மா அகப்பட்டு விட்டால், முத்தி கிடைக்காது.

எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றார்
விட்டார் உலகம் என்று உந்தீபற
வீடே வீடாகும் என்று உந்தீபற

எண் குணத்தை உடைய இறைவனை எப்போதும் சிந்தித்து இருப்பவர்கள் உலகபற்றை விட்டவர்கள் சீவன் முத்தர்கள்

சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்தது என்று உந்தீபற
ஒவ்வாதது ஒவ்வாது என்று உந்தீபற

பொறி புலன்களோடு சித்தம் ஒன்றியே இருக்கும். பொறி புலன்களில் அகப்படாமல் திருவடியையே சிந்தித்து இருக்க வேண்டும்.

உள்ளும் புறமும் நினைப்பு அறின் நின் உள்ளே
மொள்ளா அமுதாம் என்று உந்தீபற
முளையாது பந்தம் என்று உந்தீபற

சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகை வழிபாட்டில் புறத்தே தொடர்பு படுத்தும் நினைப்புகளை எண்ணாமல், சிவ சிந்தனையுடன் வழிபாடு இயற்றினால், குறையாத சிவானுபவம் உண்டாகும்.

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு
அவிழும் இவ் அல்லல் என்று உந்தீபற
அன்றி கவிழாது என்று உந்தீபற

உயிர்கள் துன்பபட காரணம், பாசத்தொடர்பு தான். இறைவனுக்கு அத்தொடர்பு இல்லை என்பதால் அவனுக்கு துன்பம்இல்லை. துன்பம் இல்லாமல் வாழ விரும்புபவர்கள் திருவருளில் அடங்கி நிற்க வேண்டும்.

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்து ஏறினார்கள் என்று உந்தீபற
பெறுவது அங்கு என்? பெணே உந்தீபற

வயலில் விதையை விதைத்தவர்கள், விதையிலிருந்து முளை தோன்றிய நிலையில் பேணி வளர்ப்பார்கள். அது போல திருவருளில் தோய்ந்து ஞானம் வெளிப்படும் போது, அதில் அழுந்தி இருக்க வேண்டும். (வித்து-திருவருள்; முளை-ஞானம்)

சொல்லும் இடம் அன்று சொல்லப் புகும் இடம்
எல்லை சிவனுக்கு என்று உந்தீபற
என்றால் நாம் என் செய்கோம் உந்தீபற

சிவம் முழு நிறைவுடைய பொருள். சிற்றறிவுள்ள பொருள் உயிர். சிவமே குருவடிவாக வந்து தம்மை காட்டினால் அன்றி உயிர்களினால் சிவத்தை அறிய முடியாது.

வீட்டில் இருக்கில் என்? நாட்டிலே போகில் என்?
கூட்டில் வாள் சாத்தி நின்று உந்தீபற
கூடப்படாதது என்று உந்தீபற

> திருவருள் துணையின்றி ஆன்மாவுக்கு சிவானுபவம் கூடாது. இல்லறமோ, துறவறமோ எந்நெறியில் நின்றாலும் இதுவே.

சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்கு நின்று
ஆவி அறாதே என்று உந்தீபற
அவ் உரை கேளாதே உந்தீபற

> தெளிவில்லாத சமய கொள்கைகளில் வாழ் நாளை கழித்து, மீண்டும் பிறவி கடலில் விழாமல், வாய்த்தது நம் தமக்கு என எடுத்த பிறவியில் பயன் பெற விழைய வேண்டும்.

துரியம் கடந்த இத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றது என்று உந்தீபற
துறந்தார் அவர்கள் என்று உந்தீபற

> யான் எனது என்ற செருக்கு நீங்கி இறைவன் திருவடியே சிந்தித்து இருப்பவர்கள் துறவு எய்திய தொண்டர்கள், அவர்கள் நினைவு நிலையில் இருக்கும் போதே தூரியம் கடந்த நிலையில் இறைவன் திருவருளை உணர்வார்கள்.

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம் அங்கே
முற்ற வரும் பரிசு உந்தீபற
முளையாது மாயை என்று உந்தீபற

உலக போகங்களை பெறும் போது ஆன்மா பெறும் இன்பங்கள், தற்போதம் ஒழிந்து சிவத்தையே நினைந்து இருக்க, சிற்றின்ப பயன் உயிரை சாராமல் பேரின்பமே விளையும்

பேரின்பமான பிரமக் கிழத்தியோடு
ஓர் இன்பத்து உள்ளான் என்று உந்தீபற
உன்னையே ஆண்டான் என்று உந்தீபற

பேரின்ப வடிவிலான அருட் சத்தியுடன் பிரிப்பின்றி இருப்பவன் சிவ பெருமான். அவன் தன்னை சார்ந்தவர் களுக்கும் பேரின்பத்தையே அளிக்கிறான்

பெண்டிர் பிடிபோல ஆண் மக்கள் பேய் போலக்
கண்டாரே கண்டார் என்று உந்தீபற
காணாதார் காணார் என்று உந்தீபற

இறை சார்புற்ற ஆன்மாக்கள் தன்னை மறந்து தன் செயல் இன்றி, செய்யும் செயல்கள் யாவும் திருவருட் செயலாகவே இருக்கும்.

நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம் என்று உந்தீபற
நாதற்கு இடம்அது என்று உந்தீபற

பஞ்ச பூதங்களில் நாலாவது காற்று, இது பயிற்சியில் ஒன்றும் போது, அந்த நான்காம் நிலை அமையும். அதுவே நின்மல துரியம் அந்நிலையில் ஆன்மா பெருமானை கூடும். (நின்மல தூரியம்-மல வாசனையின்றி வியாபாக அறிவு விளங்கி தோன்றும் நிலை)

சென்ற நெறி எல்லாம் செந்நெறிஆம் படி
நின்ற பரிசு அறிந்து உந்தீபற
நீ செயல் செய்யாதே உந்தீபற

தானே செய்கிறோம் என்ற உணர்வில் இருந்து விலகி இறைவன் செலுத்த செயல்படுகிறோம் என்ற உணர்வு ஏற்படும் போது, அது தற்போதம் அழிய ஏதுவாக இருக்கும்.

பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது என்
அக்கொழு நீ அறிந்து உந்தீபற
அறிந்து அறியாவண்ணம் உந்தீபற

தன் முனைப்பு இல்லாமல் திருவருளின் வழி அடங்கி நின்று ஒழுகுதல் வேண்டும். கிடைத்த நல் பிறப்பை வீணாக்க கூடாது.

அது இது என்னாது அனைத்து அறிவு ஆகும்
அது இது என்று அறிந்து உந்தீபற
அவிழ்ந்த சடையான் என்று உந்தீபற

திருவருள் துணையின்றி, ஆன்மா தானே சிவமாகி விடாது. அவன் என்னும் இறைவன் இவன் என்னும் ஆன்மாவுடன் ஒன்றினால் அன்றி ஆன்மாவுக்கு உய்வு இல்லை

அவன் இவன் ஆனது அவன் அருளால் அல்லது
இவன் அவன் ஆகான் என்று உந்தீபற
என்னும் இவனே என்று உந்தீபற

திருவருள் துணையின்றி, ஆன்மா தானே சிவமாகி விடாது. அவன் என்னும் இறைவன் இவன் என்னும் ஆன்மாவுடன் ஒன்றினால் அன்றி ஆன்மாவுக்கு உய்வு இல்லை

முக்தி முதலுக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற

முத்தியை பெறக் கூடிய ஆன்மா நம்மை மறைக்கும் சுற்றி உள்ள ஆசை வலையில் விழுந்திடாமல், திருவருள் வயப்பட்டு நிற்க வேண்டும்.

அண்டம் முதலாய் அனைத்தையும் உட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற
குறைவற்ற செல்வம் என்று உந்தீபற

தனு, கரண, புவன, போகங்கள் ஆகிய மாயா காரியங்களிலேயே உள்ளத்தை பதித்து காலத்தை வீணாக்காமல், குறைவில்லா செல்வம் தரும் சிவபெருமானையே சிந்தித்து இருக்க வேண்டும்.

காயத்துள் மெய்ஞானக் கள் உண்ணமாட்டாதே
மாயக் கள் உண்டார் என்று உந்தீபற
வறட்டுப் பசுக்கள் என்று உந்தீபற

திருவடி தாமரையில் கிடைக்கும் இன்பத்தை நுகராமல், பால் சுரக்காத பசுவைப் போல, நிலையில்லாத மாயா காரியங்களில் மயங்கி கிடப்பது அறியாமை ஆகும்.

சிந்தையின் உள்ளும் என் சென்னியினும் சேர
வந்தவர் வாழ்க என்று உந்தீபற
மடவாள் உடனே என்று உந்தீபற

குரு வடிவாக எழுந்து அருள் செய்யும் சிவம் வாழ்க. அருள் வடிவாக எழுந்தருளி உள்ளாமையால், அருளாகிய அம்மையுடனே இன்று போல என்றும் வாழ்க.

வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்யவந்தான் உரை உந்தீபற
உண்மை உணர்ந்தார் என்று என்று உந்தீபற

இந்நூலை ஆக்கிய உய்யவந்த தேவநாயனார், ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு செய்த அருளிப்பாடுகளை முறையாக கற்று உணர்ந்தார்கள் உண்மையை உணர்ந்தவர்கள் ஆவர்.

ஆசிரியரின்
மக்கள் மனம் கவர்ந்த பிற நூல்கள்.



குறிப்புகளுக்காக..

குறிப்புகளுக்காக..

குறிப்புகளுக்காக..

ஆசிரியர் குறிப்பு

விசு அய்யர், தமிழ்நாட்டில் உள்ள வீரம் செறிந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில், சிவகெங்கை சீமையில் இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில், இன்று உலக எழுத்தறிவு தினமாக கொண்டாடப்படும் தினத்தில் தோன்றியவர்.

வரி சட்டத்தில் முதுகலை பட்டயம் பெற்றவர். பள்ளி நாள் முதல் தொடர்ந்து சிறந்த மாணவனாக தேர்ந்து எடுக்கப்பட்ட இவர் இந்திய அளவிலான நினைவு திறன் போட்டியில் பரிசு பெற்றவர். தேசிய அளவிலான அதிவேக தட்டச்சு போட்டியில் வெற்றி பெற்றவர். "சித்தாந்த ரத்னா", "திருவருட் செல்வர்", "கைரேகை கலைஞன்" போன்ற இவர் பெற்ற பாராட்டுக்களும் நன்மதிப்பும் பெருமைக்கு உரியன.

இன்று வரை உண்மையான பிரம்மச்சரிய வாழ்க்கையில், உணவிலும், உணர்விலும் இயற்கையோடு இனைந்து வாழும் சீரிய ஒழுக்கத்தை கொண்டவர். பெரியபுராணம், திருக்குறள், மற்றும் சைவ திருமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் சமய இலக்கியங்களில் பல ஆய்வு கட்டுரைகளை பதிப்பித்து உள்ளார்.

பன்முக திறமை கொண்ட இவர் எழுதிய சோதிட புத்தகங்களும் வார இதழில் எழுதும் தொடர் கட்டுரைகளும் வாசகர்கள் நெஞ்சத்தை கிள்ளி செல்லும். இவருக்கு என்றே ஒரு வாசகர் கூட்டம் இவரை சுற்றி தொடரும்.

சென்னை அரிமா சங்கம், சென்னை சுழற் சங்கம், அறிதுயில் சங்கம் மற்றும் குடும்ப நற்பணி மன்றம் போன்ற பல இடங்களில் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தி உள்ளார்.

உடலாலும் உள்ளத்தாலும் சீரிய ஒழுக்கத்தினாலே இன்றும் சொல்லிலும் செயலிலும் இளைஞனாகவே இருக்கின்றார். சொந்த வாழ்க்கையில் மட்டுமின்றி, நடைமுறை வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்க முறையினை செயல்படுத்தும் இவர் கையில் திருக்குறளும், பையில் திருநீறும், மெய்யில் உருத்திராக்கமும் இருக்கும் என்பதே இவரின் எளிய அடையாளம்.